இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

உண்மையான அமைதி என்பது ஆயுதங்கள் அல்லது அச்சத்தின் வழியாக அடையப்படுவதில்லை, மாறாக அகிம்சை, உரையாடல், பணிவு, நீதி மற்றும் மனித மாண்பிற்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்பு வழியாக அடையப்படுகிறது என்று கூறியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

# கிறிஸ்மஸ் கவிதை

## தொழுவத்தில் பிறந்தவர் தொழுகைக்கு உரியவரானார்

ஆ.வி.டேவிட். குளுவாங்

நூற்றாண்டு காலமாக
அரச பரம்பரையில்
பரமனைத் தேடினர் – மாறாக
எளிய கோலத்தில்
ஏழைக்கு மாந்தராக
ஆழ்கடல் சிப்பியாக – மாட்டு
தொழுவத்தில் பிறந்து
தொழுகைக் குறியவரானாரே.

பணத்தைக் கொண்டு
பாரினைக் கவ்வ,
எளியோரை
வலியோர் விழுங்க,
மதமும் மிருகமாகி,
மனமும் மண்ணாகி,
பாசமும் வேஷமாகி
மண்ணுலகை ஆளும்
மானிடனை மீட்க – இன்று
மீட்பர் உதித்துள்ளார்.
நலம் பொங்கும்
நன்னாளிதுவில் – குவலயம் மலர
கர்த்தரில் இணைவோம்.


பாதிக்கப்பட்டவர்களுக்கு மலர் அஞ்சலி (REUTERS/Hollie Adams)

# திருத்தந்தையுடன் இஸ்ரேல் அதிபர் தொலைபேசியில் உரையாடல்

திருத்தந்தையுடன் இஸ்ரேல் அதிபர் தொலைபேசியில் மேற்கொண்ட இந்த உரையாடல், பொதுவான மத விழாக்களின் பின்னணியிலும், பாதுகாப்பு, அமைதி மற்றும் மனிதாபிமான நிவாரணம் தொடர்பான தற்போதைய அனைத்துலக கவலைகளுக்கு மத்தியிலும் நடைபெற்றது.

கிறிஸ்துமஸ் விழா மற்றும் யூதர்களின் ஹனுக்கா விழா நெருங்கி வரும் வேளையில், திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களுடன் இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்சாக் அவர்கள் தொலைபேசி வாயிலாக உரையாடினார் என்று திருப்பீடச் செய்தித் தொடர்பகம் தெரிவித்துள்ளது.

டிசம்பர் 17, புதன்கிழமையன்று, நிகழ்ந்த இந்தத் தொலைபேசி உரையாடலில் அண்மையில் சிட்னியில் நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல் உள்ளிட்ட உலகளாவிய நிகழ்வுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது என்றும் திருப்பீடச் செய்தித் தொடர்பகம் கூறியுள்ளது.

மேலும், இந்த உரையாடலின் போது யூதர்கள் மீதான வெறுப்பின் அனைத்து வடிவங்களையும் கத்தோலிக்கத் திரு அவைக் கடுமையாகக் கண்டிக்கிறது என்பதை உறுதிப்படுத்திய திருத்தந்தை, இத்தகையச் செயல்கள் யூதச் சமூகத்தினர் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்தினரிடையே தொடர்ந்து அச்சத்தை பரப்பி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் நடைபெற்று வரும் அமைதி முயற்சிகளில் தொடர்ந்து விடாமுயற்சியுடன் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்த திருத்தந்தை, அப்பகுதியில் மனிதாபிமான உதவி முயற்சிகளைத் தீவிரப்படுத்தவும், அவற்றைத் தொடர்ந்து தடையின்றி மேற்கொள்ளவும் வேண்டிய அவசரத் தேவையையும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த உரையாடல், பொதுவான மத விழாக்களின் பின்னணியிலும், பாதுகாப்பு, அமைதி மற்றும் மனிதாபிமான நிவாரணம் தொடர்பான தற்போதைய அனைத்துலக கவலைகளுக்கு மத்தியிலும் நடைபெற்றது.

ஜான்சி ராணி அருளாந்து - வத்திக்கான்

# உண்மையான அமைதி அகிம்சையால் அடையப்படுகிறது!


உரை வழங்கும் திருத்தந்தை (ANSA)

உண்மையான அமைதி என்பது ஆயுதங்கள் அல்லது அச்சத்தின் வழியாக அடையப்படுவதில்லை, மாறாக அகிம்சை, உரையாடல், பணிவு, நீதி மற்றும் மனித மாண்பிற்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்பு வழியாக அடையப்படுகிறது என்று கூறியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

டிசம்பர் 18, வியாழக்கிழமையன்று, வரும் புத்தாண்டு ஜனவரி முதல் நாளன்று சிறப்பிக்கப்படவிருக்கும் 59-வது உலக அமைதி நாளுக்காக வழங்கியுள்ள செய்தியில் இவ்வாறு கூறியுள்ள திருத்தந்தை, அமைதி இதயத்தில் தொடங்குகிறது, நாம் என்ன செய்கிறோம் என்பதில் வெளிப்படுகிறது, மேலும் அது வீட்டிலும் உலகிலும் நமது தேர்வுகளை வழிநடத்த வேண்டும் என்று மொழிந்துள்ளார்.

”உங்கள் அனைவருக்கும் அமைதி உரித்தாகுக! ஆயுதமற்ற மற்றும் ஆயுதம் களையும் ஓர் அமைதியை நோக்கி” என்ற தலைப்பில் தனது சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்டுள்ளார் திருத்தந்தை.

## 01. அமைதி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் கொடை

”உங்களுக்கு அமைதி உரித்தாகுக! ” என்ற இயேசுவின் வாழ்த்தை நினைவு கூர்ந்து தனது செய்தியைத் தொடங்கியுள்ள திருத்தந்தை, உண்மையான அமைதி என்பது மோதல்கள் இல்லாதது மட்டுமல்ல, இதயங்களை ஒளிரச் செய்து வன்முறையை வெல்லும் ஒரு மாற்று சக்தியாகும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

இருள் மற்றும் சோதனைகளுக்கு மத்தியிலும் கூட அமைதி நிலவுகிறது என்றும், மேலும் அதற்கு வெளிப்படைத்தன்மை, விழிப்புணர்வு மற்றும் அதற்காக உழைத்தவர்களை நினைவுகூருதல் தேவை என்பதையும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை.

## 02. ஆயுதமற்ற அமைதி

உண்மையான கிறிஸ்தவ அமைதி இயேசுவின் வன்முறையற்ற முன்மாதிரியைப் பின்பற்றுகிறது என்றும், அது ஆயுதமற்றது, பணிவு மற்றும் விடாமுயற்சி கொண்டது என்றும் எடுத்துக்காட்டியுள்ள திருத்தந்தை, அணு ஆயுதங்கள் உட்பட இராணுவ பலம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை நவீன காலத்தில் நம்பியிருப்பது அச்சத்தை அடிப்படையாகக் கொண்டது மற்றும் உறுதியற்றத்தன்மையை ஏற்படுத்தும் என்று விமர்சிக்கப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன, அதேவேளையில் கல்வி மற்றும் ஊடகத் திட்டங்கள் பெரும்பாலும் அமைதியை வளர்ப்பதற்குப் பதிலாக தற்காப்பு மனநிலையை ஊக்குவிக்கின்றன என்று தெரிவித்துள்ள திருத்தந்தை, தனிப்பட்ட முறையிலும் சமூகத்திலும் போரை நிராகரித்து அமைதியைத் தேர்ந்தெடுக்குமாறு மக்களை வலியுறுத்தியுள்ளார்.

## 03. ஆயுதங்களைக் களைந்த அமைதி

அமைதிக்கு அரசியல் உடன்பாடுகள் அல்லது ஒப்பந்தங்கள் மட்டுமல்ல, வெளிப்படைத்தன்மை, உரையாடல் மற்றும் பணிவு ஆகியவை தேவை என்று எடுத்துக்காட்டியுள்ள திருத்தந்தை, ஒருங்கிணைந்த ஆயுதக் குறைப்பு என்பது இதயங்களையும் மனதையும் புதுப்பித்தல், வன்முறை, தேசியவாதம் மற்றும் அரசியல் நோக்கங்களுக்காக மதத்தை தவறாகப் பயன்படுத்துவதை எதிர்ப்பது ஆகியவற்றை உள்ளடக்கியது என்றும் உரைத்துள்ளார்.

நம்பிக்கை, நீதி மற்றும் மன்னிப்பை வளர்ப்பதற்கு ஆன்மீக நடைமுறைகள், மதங்களுக்கு இடையேயான உரையாடல் மற்றும் சமூக முயற்சிகள் அவசியம் என்று கூறியுள்ள திருத்தந்தை, தனிப்பட்ட மற்றும் சமூகப் பொறுப்பு, வன்முறையற்ற பங்கேற்பு மற்றும் மறுசீரமைப்பு நீதி ஆகியவை சமூகங்களை மாற்றவும் மோதல்களைக் குறைக்கவும் உதவுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

## 04. நம்பிக்கை மற்றும் செயல்பாடு

அமைதி சாத்தியம் என்றும், அது தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் ஆர்வமுடனும் வளர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை, ஆயுதங்கள் அமைதிக்கான கருவிகளால் மாற்றப்பட்டு, ஆயுதக் குறைப்பு, நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் ஓர் உலகத்திற்கு அழைப்பு விடுத்து தனது செய்தியை நிறைவு செய்துள்ளார்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# எல்லைப்புற பகுதிகளில் நற்செய்திக்கு சான்று பகர்வதற்காக நன்றி!


UISG எனப்படும் உலகளாவிய பெண் துறவு சபைகளின் தலைவர்கள் (© UISG)

தற்போதைய காலம் விரைவான மாற்றத்தாலும், பல அவசரத் தேவைகளாலும் குறிக்கப்பட்டுள்ளது என்றும், எல்லைப்புற பகுதிகளில் ஒத்துழைப்பு மற்றும் மறைபரப்புப் பணியில் பெண் துறவியரின் அர்ப்பணிப்பு நற்செய்திக்கு ஒரு வலிமைவாய்ந்த சான்றாக மாறுகிறது என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

UISG எனப்படும் உலகளாவிய பெண் துறவு சபைகளின் தலைவர்கள் அமைப்பின் 60-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அதன் தலைவர் அருள்சகோதரி Oonah O’Shea அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு கூறியுள்ளார் திருத்தந்தை.

அவர்களின் இந்த ஆண்டுவிழா எதிர்நோக்கின் யூபிலி ஆண்டுடன் ஒன்றிணைந்து செல்கிறது என்பதைக் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, பெண் துறவறத்தார் யாவரும் இறைமக்கள் அனைவருடனும் இணைந்து திருப்பயணிகளாகவும் மறைபரப்புப் பணியின் சீடர்களாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்த அறுபது ஆண்டுகளில், ஆறு கண்டங்களிலிருந்தும் வந்த பெண் துறவு சபைகளின் தலைவர்களிடையே உரையாடலுக்கான இடத்தை UISG அமைப்பு எவ்வாறு வளர்த்துள்ளது என்பதை நினைவு கூர்ந்துள்ள திருத்தந்தை, அவர்களின் தனிவரங்களின் வளமையையும் தூய ஆவியாரின் கொடைகளையும் திருஅவை மற்றும் உலகத்தின் நன்மைக்காக எவ்வாறு பகிர்ந்துகொண்டுள்ளனர் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

UISG எனப்படும் உலகளாவிய பெண் துறவு சபைகளின் தலைவர்கள் அமைப்பில், 97 நாடுகளிலிருந்து, 1,900-த்திற்கும் மேற்பட்ட பெண் துறவு சபைகளின் தலைவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 25 ஐரோப்பிய நாடுகளிலிருந்து 1046 பேரும், 16 ஆசிய நாடுகளிலிருந்து 184 பேரும், 30 அமெரிக்க நாடுகளிலிருந்து 479 பேரும், 22 ஆப்ரிக்க நாடுகளிலிருந்து 166 பேரும், 4 ஓசியானியா நாடுகளிலிருந்து 28 பேரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

## 2026 திருநீற்றுப் புதன் நோன்பு, ஒருசந்தி அனுசரிப்பதிலிருந்து விலக்கு அளிப்பது தொடர்பான மேய்ப்புப்பணி அறிக்கை

**மலேசியா, சிங்கப்பூர், புருனை கத்தோலிக்க ஆயர் பேரவை தேதி: 18 டிசம்பர் 2025**

அன்பார்ந்த இறைமக்களே,

அடுத்த ஆண்டு (2026), சீனப் புத்தாண்டின் இரண்டாவது நாள் கொண்டாட்டம், பிப்ரவரி 18, 2026 திருநீற்றுப் புதன்கிழமையன்று வருகிறது. திருநீற்றுப் புதன் வழக்கம் போல் ஒரு நோன்பு மற்றும் ஒருசந்தி நாளாகும்.

இதனை முன்னிட்டு, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருனை கத்தோலிக்க ஆயர் பேரவை, பிராந்திய வழிபாட்டு முறை ஆணையத்துடன் கலந்தாலோசித்து, 2026 பிப்ரவரி 18, திருநீற்றுப் புதன்கிழமையன்று நோன்பு மற்றும் ஒருசந்தி அனுசரிப்பதிலிருந்து விலக்கு (dispensation) அளிக்கிறது. ஆயினும், அன்றைய தினம் திருநீற்றுப் புதன் வழிபாட்டைக் கொண்டாடும் மரபும், நெற்றியில் திருநீறு பூசும் சடங்கும் வழக்கம்போல் நடைபெறும்.

கத்தோலிக்க விசுவாசிகள் அனைவரும், தவக்காலத்தின் வேறொரு நாளில் நோன்பு மற்றும் ஒருசந்தியைக் கடைப்பிடிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். (புனித வெள்ளி ஏற்கனவே ஒரு நோன்பு மற்றும் ஒருசந்தி நாள் என்பதால், அந்நாளைத் தவிர்த்து வேறொரு நாளைத் தேர்ந்தெடுக்கவும்). ஆண்டவரின் ஆசீர்வாதம் உங்கள் அனைவர் மீதும் நிறைவாக இருப்பதாக.

+ William Cardinal Goh

கர்தினால் வில்லியம் கோ
தலைவர்
ஆயர் பேரவையின் பிராந்திய வழிபாட்டு முறை ஆணையம்

## தூய கன்னி மரியாவின் அமலோற்பவ பெருவிழா









கடந்த 7 டிசம்பர் 2025 அன்று, தூய கன்னி மரியாவின் அமலோற்பவப் பெருவிழா மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. சுமார் 1,500 விசுவாசிகள் திருப்பலியில் கலந்துகொண்டனர். இந்த விழாவின் சிறப்பம்சம் என்னவெனில், வெளியூர்களிலிருந்தும் பிற பங்குத்தளங்களிலிருந்தும், கிறிஸ்தவர்கள் அல்லாத பலரும் அன்னை மரியாவுக்கு மரியாதை செலுத்தவும், ஜெபிக்கவும் வருகை தந்திருந்தனர்.

விழா கொடி ஏற்றும் நிகழ்ச்சி நவம்பர் 28 ஆம் தேதி அருட்பணியாளர் நெல்சன் ஜோசப் அவர்களால் நடத்தப்பட்டது. 9 நாள் நவநாள் 24 அடிப்படை திருச்சபை சமூகங்களும் (BEC) மாண்டரின் அப்போஸ்தலிக்கக் குழுவும் இணைந்து வழிநடத்தின. ஒன்பதாம் நாள் நவநாள் திருப்பலி, மலாக்கா மெர்லிமாவ் புனித யாக்கோபு தேவாலயத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் தேவதாஸ் அவர்களால் நடத்தப்பட்டது.

இந்தோனேஷியாவின் மேடானில் பிறந்து, தற்போது கெடா சுங்கை பட்டானி, வசிக்கும் சகோதரி எஸ்தர் ஆன்டனி, 2015 முதல் சுங்கை பாது திருக்கோவிலுக்குத் தொடர்ந்து வருகை தருகிறார். அன்னை மரியாவிடம் ஒவ்வொரு முறையும் ஜெபிக்கும்போது அமைதியும் ஆசீர்வாதமும் கிடைக்கிறது என்றார்.

தூய கன்னி மரியாவின் அமலோற்பவப் பெருவிழா நாளன்று நடைபெற்ற திருப்பலி, பெர்லிஸ் புனித மரியா பாத்திமா தேவாலயத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் பிரான்ஸிஸ் சேவியர் மற்றும் அருட்பணியாளர் விக்டர் லூயிஸ் ஆகியோரால் நடத்தப்பட்டது. அன்னை மரியாவின் பரிந்துரைக்காக ஜெபித்து, பாவமில்லாத ஒரு வாழ்வைப் பெற விசுவாசிகளிடம் கேட்டுக்கொண்டார்.

திருவிழா ஏற்பாட்டுக் குழுத் தலைவரும் அடிப்படை திருச்சபை சமூகங்களின் தலைவராகப் பணியாற்றும் சகோதரி மேனகா சாரோ, அருட்பணியாளர் விக்டர் லூயிஸ் வழிகாட்டுதலுக்கும் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்தார். மேலும், இந்த ஆண்டின் விழாவை வெற்றிகரமாக்கிய அனைத்துத் தன்னார்வலர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைப்பிற்கும் அவர் மிகுந்த பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இத்தேவாலயத்திற்கு வர விரும்புகிறவர்கள் ஒருங்கிணைப்பாளர் திரு பிரான்சிஸை (013-456 9964) தொடர்பு கொள்ளலாம்.

(ஆக்கம் ஜெனிப்பர் மரியா இம்மானுவேல)

# CFM கிறிஸ்மஸ் தேநீர் விருந்தில் பிரதமரும் துணைப் பிரதமரும் பங்கேற்பு: வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு

கோலாலம்பூர்: மலேசிய கிறிஸ்தவக் கூட்டமைப்பின் (Christian Federation of Malaysia - CFM) வரலாற்றிலேயே முதன்முறையாக, 2025-ஆம் ஆண்டுக்கான கிறிஸ்துமஸ் தேநீர் விருந்தில் பிரதமர் மற்றும் துணைப் பிரதமர் இருவரும் கலந்து கொண்டனர். இது தேசியத் தலைவர்களுக்கும் கிறிஸ்தவச் சமூகத்திற்கும் இடையே வளர்ந்து வரும் ஈடுபாட்டைப் பிரதிபலிக்கும் ஒரு வரலாற்று மைல்கல்லாகும்.



சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட துணைப் பிரதமர் டத்தோ அமர் ஹாஜி ஃபடில்லா பின் ஹாஜி யூசோப் அவர்கள், மலேசியர்கள் மத்தியில் தேசிய ஒற்றுமையானது பகிரப்பட்ட உரையாடல்கள் மற்றும் கொண்டாட்டங்கள் மூலமே உருவாக்கப்படுகிறது என்பதை நினைவூட்டினார். CFM குடும்பத்தைச் சேர்ந்த திருச்சபைத் தலைவர்கள், தூதர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கிறிஸ்தவத் தலைவர்கள் என 300-க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் மத்தியில் அவர் பேசினார். "ஒற்றுமை என்பது பாராளுமன்றத்திலோ அல்லது கொள்கை வகுக்கும் அறைகளிலோ மட்டுமல்ல, மாறாக நாம் ஒன்றாக அமரும் இடங்களிலும், பகிரப்பட்ட உரையாடல்களிலும், இது போன்ற பகிரப்பட்ட கொண்டாட்டங்களிலும்தான் கட்டமைக்கப்படுகிறது," என்று அவர் கூறினார். பின்னர் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்த அவர், "கடவுள் மீதும், ஒருவருக்கொருவர் மீதும், நமது அன்புக்குரிய மலேசியாவின் எதிர்காலத்தின் மீதும் நம்பிக்கை வைக்குமாறு" மலேசியர்களை ஊக்குவித்தார்.

அவரது கருத்துக்கள், மலேசியத் திருச்சபைகளின் மன்றத்தின் (Council of Churches of Malaysia - CCM) தலைவரும், கூச்சிங் ஆங்கிலிக்கன் மறைமாவட்டத்தின் ஆயருமான டத்தோ டானல்ட் ஜூட் (Bishop Datuk Danald Jute) அவர்களின் வரவேற்புரையை எதிரொலிப்பதாக அமைந்தன.

பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அவர்கள் லங்காவியிலிருந்து வந்திறங்கியதும் இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். கிறிஸ்மஸ் வாழ்த்துகளைத் தெரிவித்த அவர், மலேசியர்கள் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இனம் மற்றும் மத ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்டதாக இருந்தாலும், மலேசியா மிகவும் அமைதியான நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். பெரும்பான்மையினரின் அடக்குமுறையையோ அல்லது சிறுபான்மையினரின் அடக்குமுறையையோ நாடு நிராகரிக்க வேண்டும் என்றும், அதற்குப் பதிலாக நியாயம் மற்றும் நீதியில் நிலைத்திருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த வருடாந்திர கிறிஸ்துமஸ் வரவேற்பு நிகழ்ச்சியானது மலேசிய கிறிஸ்தவக் கூட்டமைப்பால் (CFM) ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு, CFM-இன் மூன்று அங்கத்துவ அமைப்புகளில் ஒன்றான மலேசியத் திருச்சபைகளின் மன்றம் (CCM) இதனை முன்னின்று நடத்தியது. இவ்வமைப்புகள் ஒன்றிணைந்து மலேசியாவில் உள்ள கிறிஸ்தவ மக்கள் தொகையில் சுமார் 95 சதவீதத்தைப் பிரதிபலிக்கின்றன.

## இன்று நாம் கிறிஸ்து இயேசு, அன்னை மரியாள் மற்றும் யோசேப்பு ஆகியோரை உள்ளடக்கிய திருக்குடும்பப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம்.



முதல் வாசகம்: சீராக் 3:2-6, 12-14
இரண்டாம் வாசகம்: கொலோசெயர் 3:12-21
நற்செய்தி: மத்தேயு 2:13-15, 19-23

இவர்களின் வாழ்வு வழியாக, குடும்ப வாழ்வின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் பற்றிச் சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம். குடும்பம் என்பது கடவுளின் அன்பான திட்டத்தின் ஒரு பகுதி என்பதையும், விசுவாசம், அன்பு மற்றும் கடவுள் மீதான நம்பிக்கை ஆகியவை கற்றுக்கொள்ளப்பட்டு வாழப்படும் ஒரு சிறப்பான இடமாக அது திகழ்கிறது என்பதையும் திருக்குடும்பம் நமக்கு நினைவூட்டுகிறது.

சீராக் ஆகமத்திலிருந்து வரும் முதல் வாசகம், "உன் தந்தையையும் தாயையும் மதித்து நட" என்ற நான்காம் கட்டளையைப் பிரதிபலிக்கிறது. பெற்றோர்கள் கடவுளின் திட்டத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார்கள் என்பதையும், பிள்ளைகளைப் பராமரித்து வளர்க்கும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும் இது நினைவூட்டுகிறது. அதே வேளையில், பிள்ளைகள் தங்கள் பெற்றோரை, குறிப்பாக அவர்கள் முதிர்வயதை அடையும்போது, மதித்து, நன்றியுணர்வுடன் பராமரிக்க அழைக்கப்படுகிறார்கள். இப்பொறுப்புகள் தாராள மனத்துடனும் பரிவுடனும் ஏற்கப்படும்போது, குடும்ப வாழ்வு கடவுளின் அன்பின் உயிருள்ள பிரதிபலிப்பாக மாறுகிறது.

கொலோசெயர் திருமுகத்தில் இருந்து வரும் இரண்டாம் வாசகத்தில், அன்றாடக் குடும்ப வாழ்விற்கான நடைமுறை வழிகாட்டுதலைப் புனித பவுல் நமக்குத் தருகிறார். நாம் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அவரால் அன்பு செய்யப்பட்டவர்கள் மற்றும் புனிதமாக்கப்பட்டவர்கள் என்பதை அவர் நினைவூட்டுகிறார். இதன் காரணமாக, நாம் இரக்கம், நன்னயம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை மற்றும் மன்னிப்பு ஆகியவற்றை அணிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் தாங்கிக்கொள்ளவும், சுமைகளைப் பகிர்ந்து கொள்ளவும், மனக்கசப்புகள் ஏற்படும்போது ஒப்புரவாகவும் இப்பண்புகள் உதவுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, அன்பு எல்லாவற்றையும் பிணைத்து, குடும்பத்திற்குள் ஒற்றுமையையும் அமைதியையும் உருவாக்குகிறது என்று பவுல் வலியுறுத்துகிறார்.

நற்செய்தி வாசகம், திருக்குடும்பத்தை ஒரு நெருக்கடியான நேரத்தில் காட்டுகிறது. கனவில் எச்சரிக்கப்பட்ட யோசேப்பு, கடவுளை நம்பி, துணிவுடன் செயல்பட்டு, மரியாவையும் இயேசுவையும் எகிப்திற்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்கிறார். குடும்ப வாழ்வில் கஷ்டங்கள், பயம் அல்லது நிச்சயமற்ற தன்மை இல்லாமல் இருப்பதில்லை என்பதை இவர்களது அனுபவம் நமக்கு நினைவூட்டுகிறது. ஆயினும், குடும்பங்கள் கடவுளுக்குச் செவிசாய்த்து ஒன்றிணைந்திருக்கும்போது, சோதனைக் காலங்களிலும் அவருடைய பாதுகாக்கும் பிரசன்னத்தைக் கண்டுகொள்கிறார்கள்.

நாம் திருக்குடும்ப விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், நமது சொந்தக் குடும்ப உறவுகளைச் சீர்தூக்கிப் பார்க்க அழைக்கப்படுகிறோம். நம் குடும்பங்கள் நிறைவற்றதாகவோ, பல சவால்களைச் சந்திப்பதாகவோ இருக்கலாம்; ஆனால் அவை அன்பு, மன்னிப்பு, நன்றியுணர்வு மற்றும் விசுவாசம் நிறைந்த இடங்களாக இருக்க அழைக்கப்படுகின்றன. கிறிஸ்துவில் வேரூன்றி இருக்கும்போது, குடும்ப வாழ்வு உலகில் செயல்படும் கடவுளின் அன்பின் ஆற்றல்மிக்க அடையாளமாக மாறுகிறது.

- பாப் கோண்ட்ராத்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைபெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.